Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பெரும்பாணாற்றுப்படையில் மக்கள் குடியிருப்பு

**இளமுனைவர். ச. கலைவாணி**

**தமிழாசிரியர், அண்ணா பல்கலைக்கழகம் மண்டல வளாகம்,**

**கோயம்புத்தூர் - 641046.**

71

**ஆய்வு நோக்கம்**

சங்க காலத்தில் இயற்கை பாகுபாட்டிற்கேற்ப ஐவகை நிலங்களில் மக்கள் வாழ்ந்தனர். அவர்களின் குடியிருப்பு பகுதிகள் குறித்து பெரும்பாணாற்றுப்படையில் காணப்படும் குறிப்புகளை ஆராய்வது இவ்வாய்வு கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**ஆய்வு சுருக்கம்**

தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றிய பெரும்பாணாற்றுப்படை ஆற்றுப்படை எனும் இலக்கிய வகையைச் சேர்ந்தது. ஒரு பெரும்பாணன் மற்றொரு பெரும்பாணனிடம் இரவலர்க்கு உதவுவதற்காகவே வாயில் கதவைத் திறந்து வைத்து காத்திருக்கும் தொண்டைமான் இளந்திரையனின் அரண்மனைக்குச் செல்லும் வழியை விரிவாக கூறுகின்றான். அவ்வழியில் இருக்கும் குடியிருப்புகள் பற்றி எடுத்துரைப்பது இவ்வாய்வு கட்டுரையின் கருதுகோள் ஆகும்.

பாணன் செல்லும் வழியில் பாலை நிலத்தில் ஈச்சம் மட்டைகளால் வேயப்பட்ட எயிற்றியர் குடிசை, ஊகம்புல் வேய்ந்த மதில், குறும்பு எனும் ஊர்ப்பகுதி, குறிஞ்சித் திணை மக்கள் வாழும் நிலப்பரப்பு, முல்லைத் திணையில் கோவலர் வசிக்கும் வைக்கோல் குடியிருப்பு, மருத நிலத்து உழவர்கள் வாழும் வைக்கோல் வேய்ந்த கூரைகள், நெய்தல் நிலத்தில் வசிக்கும் வலைஞர்களின் தருப்பைப்புல் வேய்ந்த குடியிருப்பு, அந்தணர் வசிக்கும் இடம், முற்றம், வாயில், மாடம் ஆகியவற்றோடு கூடிய மாடமாளிகைகள் நிறைந்த பட்டினம், பாக்கு, தென்னை ஆகியவற்றின் தோட்டங்கள் நிறைந்த பாக்கம் ஆகியவற்றைக் கடந்து காஞ்சியை அடைய வேண்டும். அரசன் வசிக்கும் அரண்மனையின் முற்றம், தாழ்வாரம் முதலான பகுதிகள் விளக்கப்பட்டுள்ளன.

**திறவு சொற்கள்**

குறும்பு, குரம்பை, முற்றம், மாடம், பட்டினம், பாக்கம்

**முன்னுரை**

இருபத்தியொரு நரம்புகள் உடைய பேரியாழ் இசைப்பதில் வல்லவர்கள் பெரும்பாணர்கள். தமிழகத்தின் வட எல்லையான காஞ்சியை ஆட்சி செய்த தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசு பெற்ற வந்த பெரும்பாணன் ஒருவன் வறுமையில் வாடும் மற்றொரு பெரும்பாணனை அம்மன்னனிடம் சென்றால் மிகுதியான பொருள் தருவான், வறுமை நிலை மாறிவிடும் என ஆற்றுப்படுத்துகின்றான். அம்மன்னன் ஆட்சி செய்யும் காஞ்சி மாநகருக்குப் பாலை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய ஐந்து நிலங்களையும் மக்களின் குடியிருப்புகளையும் கடந்து செல்ல வேண்டும்.

**பாலை நில எயிற்றியர் குடியிருப்பு**

"ஒவ்வொரு தொழிலுக்குமான தொழிலாளர் எண்ணிக்கையில் அதிகம் என்பதால் அவரவர் தொழில் நிமித்தமாகச் சேர்ந்து வாழ இருப்பிடங்கள் தனித்தனியே அமைந்தன."[1] வேல் முனை போன்ற கூர்மையான இலைகளை அடர்த்தியாகக் கொண்ட ஆற்றுமணல் போன்ற அடியும் வளமான மடல்களும் உடைய ஈச்சமரத்தின் மட்டைகளால் பாலை நிலத்து எயினர் குடிசைகள் வேயப்பட்டிருந்தன. அவை தொலைவிலிருந்து பார்த்தால் முள்ளம்பன்றியின் முதுகு போல் காட்சியளித்தன. எயிற்றியர் தாம் மிகவும் சிரமப்பட்டு சேகரித்த உணவுப்பொருளை அணில், எலி போன்றவற்றிடமிருந்து காப்பதற்காக இவ்வலிமையான குடிசைகளை அமைத்தனர்.

**"வேல் தலை அன்ன வைந்நுதி நெடும் தகர் பெரு**
**ஈத்து இலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை"[2]**

அம்புகள் குவிந்திருக்கும் பெரிய வீடும் ஊகம் புல்லால் வேயப்பட்ட மதிலும் துடி எனும் தோல் கருவி தொங்கும் பந்தலும் நாயைக் கட்டி வைத்துள்ளதால் நெருங்க இயலாத காவல் மிகுந்த வீட்டையும் கணைய மரம் பொருத்தப்பட்ட கதவும் வரிசையாக கழுமரங்கள் நிற்கும் வாயிலும் உடையதாக எயினரின் குறும்பு எனும் ஊர் இருந்தது.

**"நெடுநுதி வயகெழு நிரைத்த வாயில்**
**கொடுவில் எயின குறும்பில் சேப்பின"[3]**

**முல்லை நில கோவலர் குடியிருப்பு**

சிறு குடில்கள் முன் உள்ள சிறிய கம்பங்களில் ஆடுகள் உண்பதற்கேற்ற வரிசையில் தழைகள் கட்டப்பட்டிருப்பது சிறுதூறு போல் வாயில் தோற்றம் தரும். சிறு மூங்கில் குச்சிகளால் கட்டப்பட்ட படல் எனும் பெயருடைய கதவால் மூடப்பட்டிருக்கும். ஆட்டுக்கிடையோடு சென்று தங்கும் இடங்களில் குட்டிகளை மூடி வைக்க வைக்கோல் கற்றைகளால் வேயப்பட்ட, கழிகளை உச்சியில் கொண்ட கூண்டு ஒருபுறம் இருக்கும். சிறு கட்டுத்தறிகள் குடில்களின் முற்றத்தில் காட்சியளிக்கும். ஆடுகளை அடைத்து வைப்பதற்கு முள் வேலி அமைப்பும் எருக் குப்பையும் அடுத்தடுத்து இடம் பெற்றிருந்தன.

**"குளகு அரை யாத்த குறும்கால் குரம்பை**
**செற்றை வாயில் செதி கழி கதவின்**
**கற்றை வேய்ந்த கழிதலை சாம்பின்"[4]**

**மருத நில உழவர் குடியிருப்பு**

வயல்வெளிகள் நிறைந்த மருத நிலத்தில் உழவர்கள் நீண்ட சுவர்களைக் கொண்ட வீடுகளைக் கட்டியிருந்தனர். அந்நெடிய சுவர்களில் வண்டி சக்கரங்களும் கலப்பைகளும் வைக்கப்பட்டிருந்தன. பெண் யானை கூட்டம் நிற்பது போல் வரகு முதலான தானியங்களை நிரப்பி வைக்கும் குதிர்கள் முற்றத்தில் இருந்தன. ஆண்யானைகளின் கால் போன்ற வரகை அரைக்கும் திரிமரம் பந்தலில் வைக்கப்பட்டிருக்கும். கருமையான நிறம் கொண்ட வரகு வைக்கோலால் வேயப்பட்டிருந்த குடில்கள் அழகாக காட்சி தரும் சிற்றூராக உழவர்களின் குடியிருப்பு பகுதி இருந்தது.

**"கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்" [5]**

அறுவடைக்காக காத்திருக்கும் வயல்களின் வரப்பு ஓரங்களில் புது வைக்கோலால் வேயப்பட்ட சிறு சிறு குடிசைகள் கவிந்திருக்கும் குடை போல் தோற்றமளிக்கும்.

**"புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்" [6]**

**நெய்தல் நில வலைஞர் குடியிருப்பு**

மெல்லிய மூங்கில்களை நெடுங்கழிகளாக வரிசையாக பரப்பி வஞ்சி அல்லது காஞ்சி மரத்தின் வெண்ணிற கொம்புகளை இடையில் குறுக்கு கழிகளாக வைத்து செருகி இவ்விரண்டையும் தாழைத் நாரால் கட்டிப் பிணைத்திருப்பர். அதன் மேற்பகுதியில் தருப்பைப் புல்லால் கூரை வேய்ந்திருப்பர். குறுகிய தாழ்வாரப் பகுதியில் மீன்களைக் கொட்டி வைக்கும் பறிகள் கட்டியிருக்கும். இத்தகு வீட்டு முற்றத்தில் கொம்புகள் நட்டு பந்தலில் படர்ந்திருக்கும் அவரை போன்ற கொடி வகைகள் காணப்படும்.

**"வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇத்**
**தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த"[7]**

**அந்தணர் குடியிருப்பு**

தினமும் பசுஞ்சாணமும் செம்மண்ணும் கொண்டு மெழுகுவதால் தூய்மையாகக் காணப்படும் அந்தணர்கள் இல்லங்களின் உள்பகுதியில் தெய்வ படிவங்கள் இருக்கும்.

**"மறை காப்பாளர் உறைபதி சேப்பின்"[8]**

**குடியிருப்பின் அமைப்பு**

**அ) முற்றம்**

வீட்டின் உள்பகுதியில் சதுர வடிவத்தில் உள்ள திறந்த வெளி பகுதி முற்றம் என்றும் **முன்றில்** என்றும் வழங்கப்படும். பெரும்பாணாற்றுப்படையில் முன்றில், முற்றம் எனும் சொற்களை நேரடியாகவே பல இடங்களில் உரைத்துள்ளார் ஆசிரியர்.

**"மஞ்சள் முன்றில் மணம் நாறு படப்பை" [9]**

**"செவ்வி பார்க்கும் செழுநகர் முற்றத்து" [10]**

**ஆ) இறப்பை**

மழை பெய்தால் வீட்டின் சுவர்கள் நனையாத வண்ணம் தாழ்வான இறப்பை நான்கு புறங்களிலும் அமைக்கப்பட்டிருக்கும். இதனை இறை, இறப்பை, இறவானம், தாழ்வாரம் எனப் பல பெயர்களில் வழங்குவர்.

"**குறிஇறைக் குரம்பைப் பறியுடை முன்றில்"[11]**

**இ) வாயில்**

ஓரிடத்தின் உள்புறத்தே நுழையும் பகுதி வாயில் என வழங்கப்படுகின்றது. இரவலர்கள் வந்து பரிசு பெற்று போக வசதியாக அடைக்காத வாயிலையும் காவல்காட்டையும் கொண்டது இளந்திரையனின் நாடு.

**"அடையா வாயில் மிளைசூழ் படப்பை"[12]**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**ஈ) மாடம்**

ஒரு கட்டிடத்தின் மாடிப் பகுதியை மாடம் என்றும் மேற்கூரையின்றித் திறந்த நிலையில் உள்ள மேல் தளத்தை வேயாமாடம் என்றும் குறித்தனர். பருவகாலத்திற்கேற்ப பல வகை மாடங்கள் கட்டப்பட்டிருந்தன.

**“விண்பொர நிவந்த வேயா மாடத்து”[13]**

**பட்டினம்**

நீர்ப்பாயல் எனும் பட்டினத்தின் கடற்கரைப் பகுதியில் மணல் பரந்து விரிந்திருந்தாலும் அதன் இருபுறமும் வானளாவிய மாடமாளிகைள் கட்டப்பட்டிருக்கும். துறைமுகத்தில் வணிகம் மேற்கொள்ளும் வணிகர்களின் இல்லங்கள் இருக்கும். அங்கு உயர்ந்த மேல்நிலை மாடத்தில் சிலம்பு ஒலிக்க மகளிர் பந்தாடுவர்.

**“பட்டினம் மருங்கின் அசையின் முட்டில்”[14]**

**“வான்தோய் மாடத்து வரிபந்து அசைஇ”[15]**

**பாக்கம்**

தென்னை ஓலையால் வேயப்பட்ட முற்றமும் பயிர் செய்யும் உழவர்களின் மனைகளும் பலா, பாக்கு, தென்னை முதலான தோப்புகள் நிறைந்தும் இருக்கும் பாக்கங்களையும் பாணர்கள் கடந்து வர வேண்டும்.

**“வீயா யாணர் வளம்கெழு பாக்கத்து”[16]**

**மன்னன் அரண்மனை**

மன்னன் இளந்திரையனின் அரண்மனை முற்றத்தைக் கடந்து அரசவைக்குச் செல்லும் இடைவழியில் மாடத்தின் தாழ்வாரத்தில் புறாக்கள் சப்தம் எழுப்பிக் கொண்டிருக்கும். அரண்மனையின் உள்பகுதியில் பொன் குவியல் கொட்டிக் கிடக்கும்.

**முடிவுரை**

சங்க கால மக்களின் வீட்டுக் கூரைகள் ஈச்ச மட்டை, வைக்கோல், வரகு வைக்கோல், தருப்பைப் புல் ஆகியவற்றால் வேய்ந்தனர். மூங்கில், வஞ்சி, காஞ்சி மரக் குச்சிகள், தாழை நார் ஆகியவற்றைக் கூரை வேய்வதற்கான துணை பொருட்களாகப் பயன்படுத்தினர். முற்றம், இறப்பை, வாயில், மாடம், பந்தல் முதலான அமைப்புகளோடு தங்கள் குடியிருப்புகளை உருவாக்கினர்.

**துணைநூற்பட்டியல்**

1. பழந்தமிழர் தொழில்நுட்பம் - முனைவர் ஆ. மணவழகன்
அய்யனார் பதிப்பகம்
பு.எண் 32, இராமகிருஷ்ணாபுரம் 2வது தெரு,
ஆதம்பாக்கம், சென்னை - 600088.

2. பெரும்பாணாற்றுப்படை விளக்கவுரை - புலவர் கா. கோவிந்தனார் எம்.ஏ
எழிலகம்
46, செல்வ விநாயகர் கோவில் தெரு,

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

திருவத்திபுரம், செய்யாறு,
திருவண்ணாமலை - 604407.

**மேற்கோள்கள்**

1. பழந்தமிழர் தொழில்நுட்பம் – ப.எண் 36
2. பெரும்பாணாற்றுப்படை பாடல் அடிகள் 87,88
3. மேலது பாடல் அடிகள் 128,129
4. மேலது பாடல் அடிகள் 147 - 149
5. மேலது பாடல் அடி 191
6. மேலது பாடல் அடி 225
7. மேலது பாடல் அடிகள் 263, 264
8. மேலது பாடல் அடி 301
9. மேலது பாடல் அடி 354
10. மேலது பாடல் அடி 435
11. மேலது பாடல் அடி 265
12. மேலது பாடல் அடி 401
13. மேலது பாடல் அடி 348
14. மேலது பாடல் அடி 336
15. மேலது பாடல் அடி 333
16. மேலது பாடல் அடி 367